## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032

தொலைபேசி 044-22201337

மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.126/மா/2025

நாள் 27.10.2025

P. மூர்த்தி
திருப்பூர் ...... முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்
கோயம்புத்தூர் மாநகராட்சி ..... எதிர் மனுதாரர்

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், இச்சிப்பட்டி அஞ்சல், தேவராயன்பாளையம், கதவு எண். 1/88 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P.மூர்த்தி என்பவரின் 18.01.2025 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 20.01.2025 அன்று பெறப்பட்டு 126/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

### ஆணை

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், இச்சிப்பட்டி அஞ்சல், தேவராயன்பாளையம், கதவு எண் 1/88 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P.மூர்த்தி என்பவர் தனது 18.01.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் விளாங்குறிச்சி கிராமத்தில் அமையப் பெற்றுள்ள சிகரம் கார்டன் என்ற மனைப்பிரிவிற்கு ஆர்.எப்.54/2020 எம். ஹெச். (கி), நாள் 30.12.2020 என்றவாறு கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் இறுதி ஆணை வழங்கப்பட்டு மனைப்பிரிவில் உள்ள EWS மனைகளை ஒருங்கிணைக்கவோ, உட்பிரிவு செய்யவோ கூடாது என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ள நேர்வில், மனைப்பிரிவு நிபந்தனைகளுக்கு மாறாகவும், TNCDBR 2019ன் விதிகளுக்கு புறம்பாகவும், மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள EWS மனைகளை ஒருங்கிணைந்து கட்டுமானங்கள் உருவாக்கியிருப்பது குறித்து 28.08.2023 முதல் 10.07.2024 வரை கடந்த ஓராண்டுகளுக்கு மேலாக கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு புகார் மனு அளித்து மேற்கண்ட விதிமீறல் கட்டுமானங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி வருகின்ற போதும், மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள விதிமீறல் கட்டுமானங்கள் மீது நாளது தேதி வரை யாதொரு நடவடிக்கையும் மேற்கொள்ளாமல், அரசு பணியை சரிவர செய்யாமலும் மெத்தன போக்குடனும் ஏதோ உள்நோக்கத்துடனும் செயல்பட்டு காலம் கடத்தி வரும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், மேற்கண்ட சிகரம் கார்டன் மனைப்பிரிவில் உள்ள விதி மீறல் கட்டுமானங்கள் மீது நகர் ஊரமைப்பு சட்டம் மற்றும் விதிகளின் கீழ் துரித நடவடிக்கை மேற்கொள்ள, கோயம்புத்தூர் மாநகராட்சி

ஆணையாளர் அவர்களுக்கு தகுந்த உத்தரவுகள் வழங்குமாறும் தங்களை பணிவுடன் வேண்டுகிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 07.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் தனது 26.07.2025 மற்றும் 15.09.2025 நாளிட்ட கடிதங்கள் ந.க.எண்.11729/2024/எச்1 (கி)–ல் கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்:

''கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண் 22, கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், விளாங்குறிச்சி கிராமம், புல எண் 254/3B1&254/3B2–ல் 7.54 ஏக்கர் பரப்பளவில் ம.வ./ந.ஊ.இ எண் 09/2020 எண்ணிட்டு அங்கீகரிக்கப்பட்ட சிகரம் கார்டன் மனைப்பிரிவு அமைந்துள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் மனை எண்கள் 45–48, 60–63, 92–105 மற்றும் 108–121 என 10.20% இடம், குறைந்த வருவாய் பிரிவினருக்கான மனைகளாக அபிவிருத்தி செய்து ஒதுக்கப்பட்டு, விற்பனை மற்றும் அபிவிருத்தி செய்யும் பொழுது மேற்படி மனைகளை உட்பிரிவு, உபயோக மாற்றம் அல்லது மனை ஒருங்கிணைப்பு செய்தல் கூடாது போன்ற நிபந்தனைகளுடன் மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்டது.

திரு. P. மூர்த்தி அவர்களது 05.04.2023 நாளிட்ட மனுவில் குறைந்த வருவாய் பிரிவினருக்கான மனைகளாக (Economically Weaker Section Plots – EWS Plots) அபிவிருத்தி செய்து ஒதுக்கப்பட்ட மனைகளை உட்பிரிவு மற்றும் ஒருங்கிணைப்பு செய்து விற்கப்பட்டுள்ளது குறித்தும், அதனை காரணமாக கொண்டு ஒட்டு மொத்த மனைப்பிரிவு அங்கீகாரத்தையும் ரத்து செய்யக் கோரி கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு புகார் அளிக்கப்பட்டது.

திரு. P. மூர்த்தி அவர்களது 10.07.2024 மற்றும் 28.08.2023 நாளிட்ட மனுக்களில்,

(1) EWS மனைகள், 113, 114 ஆகிய மனைகளை ஒருங்கிணைத்து ஒரே மனையாக திருமதி சக்திமகேஸ்வரி என்பவராலும் ஒருங்கிணைத்து கட்டிடம் கட்டப்படுவதாகவும்,

(2) EWS மனைகள் 104, 105 மற்றும் பொது மனை 106 ஆகிய மனைகளை ஒருங்கிணைத்து ஒரே மனையாக திருமதி சுபகாயத்ரி என்பவராலும் ஒருங்கிணைத்து கட்டிடம் கட்டப்படுவதாகவும்,

(3) மனை எண் 3 உட்பிரிவு செய்யப்பட்டு விற்கப்பட்டு பின் அதில் திரு. வெங்கட்ராமன் என்பவரால் கட்டிடம் கட்டப்பட்டு வருவதாகவும்,

(4) மனை எண் 31 உட்பிரிவு செய்யப்பட்டு மனை எண் 31 West Part என மனை எண் 32 உடன் விற்கப்பட்டு திருமதி நித்யபிரியா என்பவரால் கட்டிடம் கட்டப்பட்டு வருவதாகவும் புகார் பெறப்பட்டது.

திரு. P.மூர்த்தி அவர்களது 05.04.2023 நாளிட்ட மனுவுக்கு பதிலுரையாக, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் தன்னுடைய 09.08.2023 நாளிட்ட கடிதம் ந.க.எண்.சிறப்பு/2023/எச்1 (கி)–ன் வாயிலாக மேற்படி ஒரு சில தனிமனை உரிமையாளர்கள் மேற்கொண்ட கட்டிட விதிமீறல்களுக்காக ஒட்டு மொத்த மனைப்பிரிவு அங்கீகாரத்தையும் ரத்து செய்யப்படுவதில்லை என்ற விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது.

திரு. P.மூர்த்தி அவர்களது 10.07.2024 மற்றும் 28.08.2023 நாளிட்ட மனுவின் பேரில் நடவடிக்கை மேற்கொள்ளும் விதமாக, 12.02.2025 நாளிட்ட அறிவிப்பு ந.க.எண்.11729/2024/எச்1 (கி)–ல் கடிதத்தில் ஆவணங்கள் சமர்ப்பிக்க கோரும் அறிவிப்பு சம்பந்தப்பட்ட மனைப்பிரிவு உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும் தொடர் நடவடிக்கைக்காக இடம் மற்றும் ஆவணங்களை ஆய்வு செய்யப்பட்டதில்,

(1) மனை உரிமையாளர்கள் EWS மனைகளை தனித்தனியான சொத்துகளாக கிரையம் பெற்று, அவ்வாறே உரிய விதிகளுக்குட்பட்டு தனித்தனியாக கட்டிட வரைபட அனுமதி பெற்றதும்,

(2) மாநகராட்சியிலிருந்து பெறப்பட்ட கட்டிட அனுமதிக்கு மாறாக, மனைப்பிரிவு நிபந்தனைகளை மீறி EWS மனைகளை ஒருங்கிணைத்து கட்டிடம் கட்டியதும்,

(3) பொது மனை எண் 3 West Part–ல் விதிகளுக்குட்பட்டு கட்டிட வரைபட அனுமதி பெற்றதும், மாநகராட்சியிலிருந்து பெறப்பட்ட கட்டிட அனுமதியை விட கூடுதலான அளவில் கட்டிடம் கட்டப்பட்டதும்,

கண்டறியப்பட்டு விதிமீறல்களில் ஈடுபட்ட நபர்களின் கட்டிடங்களுக்கு விதி மீறல்களை சரி செய்யக் கோரி 16.05.2025 மற்றும் 23.05.2025–ல் அனுமதியற்ற மற்றும் அனுமதிக்கு மாறான கட்டுமானம் அறிவிப்புகள் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்ற விவரமும் விதிகளுக்கு முரணாக மாநகராட்சி அதிகாரிகளால் எவ்வித கட்டிட அனுமதியும் வழங்கப்படவில்லை என்ற விவரமும் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. 23.06.2025 நாளிட்ட மனுதாரர் கடிதத்தின்படி கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம், விளாங்குறிச்சி பகுதியில் புல எண் 254–ல் அமைக்கப்பட்டுள்ள சிகரம் கார்டன் என்ற மனைப் பிரிவில் உள்ள EWS மனைகளில் உருவான கட்டுமானங்கள் குறித்து 10.07.2024 தேதியிட்ட புகார் மனு மீது தங்களால் முழுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவிட்ட காரணத்தினால் மேற்கண்ட 10.07.2024 புகார் மனு தொடர்பான கோப்பினை இறுதி செய்வதற்கு எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என தெரிவித்துள்ளார் என்பதையும் விதிகளுக்கு முரணாக மாநகராட்சி அதிகாரிகளால் எவ்வித கட்டிட அனுமதியும் வழங்கப்படவில்லை என்பதையும், இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. எனவே, மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் புகார் எண் 126/மா/2025–ஐ தள்ளுபடி செய்திடுமாறு மிகவும் பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்ளப்படுகிறது'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 16.09.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.09.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 16.09.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் விளாங்குறிச்சி கிராமத்தில் அமையப் பெற்றுள்ள சிகரம் கார்டன் என்ற மனைப்பிரிவிற்கு 30.12.2020 நாளிட்ட இறுதி ஆணை கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் வழங்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள EWS மனைகளை ஒருங்கிணைக்கவோ, உட்பிரிவு செய்யவோ கூடாது என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதற்கு மாறாகவும், TNCDBR

2019ன் விதிகளுக்கு புறம்பாகவும், மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள EWS மனைகளை ஒருங்கிணைத்து கட்டுமானங்கள் உருவாக்கியிருப்பது குறித்து 28.08.2023 முதல் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு புகார் மனு அளித்தும், நடவடிக்கை எடுக்காமல் தற்போது 7 நபர்கள் அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டப்பட்டது தொடர்பாக கோயம்புத்தூர் மாநகராட்சியால் சட்டப்பூர்வ தாக்கீதுகள் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சிகரம் கார்டன் மனைப்பிரிவில் உள்ள அனைத்து கட்டுமானங்களையும் கள ஆய்வு செய்து விதி மீறி கட்டப்பட்டுள்ள கட்டுமானங்கள் மீது தொடர் நடவடிக்கையாக நகர் ஊரமைப்பு சட்டம் மற்றும் விதிகளின் கீழ் துரித நடவடிக்கை மேற்கொள்ள கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு தகுந்த உத்தரவுகள் வழங்குமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் வேண்டுகிறேன்.''

6. கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டல நகர திட்டமிடுநர் 16.09.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண் 22, கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், விளாங்குறிச்சி கிராமம், புல எண். 254/3B1 & 254/3B2-ல் 7.54 ஏக்கர் பரப்பளவில் அங்கீகரிக்கப்பட்ட சிகரம் கார்டன் மனைப்பிரிவு அமைந்துள்ளது.

மனுதாரர் கூறியவாறு ஒரு சில தனிமனை உரிமையாளர்கள் மேற்கொண்ட கட்டிட விதி மீறல்களுக்காக ஒட்டு மொத்த மனைப்பிரிவு அங்கீகாரத்தையும் ரத்து செய்ய வழி வகையில்லை என்ற விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது.

(1) மனை உரிமையாளர்கள் EWS மனைகளை தனித்தனியான சொத்துகளாக கிரையம் பெற்று, அவ்வாறே உரிய விதிகளுக்குட்பட்டு தனித்தனியாக கட்டிட வரைபட அனுமதி பெற்றதும்,

(2) மாநகராட்சியிலிருந்து பெறப்பட்ட கட்டிட அனுமதிக்கு மாறாக, மனைப்பிரிவு நிபந்தனைகளை மீறி EWS மனைகளை ஒருங்கிணைத்து கட்டிடம் கட்டியதும்,

(3) பொது மனை எண் 3 West Part-ல் விதிகளுக்குட்பட்டு கட்டிட வரைபட அனுமதி பெற்றதும், மாநகராட்சியிலிருந்து பெறப்பட்ட கட்டிட அனுமதியை விட கூடுதலான அளவில் கட்டிடம் கட்டப்பட்டதும் கண்டறியப்பட்டது.

சம்மந்தப்பட்ட விதி மீறி கட்டிடம் கட்டிய மனை பிரிவு உரிமையாளருக்கு ஆவணங்களை சமர்ப்பிக்கக் கோரி 12.02.2025 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்டு அதனடிப்படையில் விதி மீறல்களை சரி செய்யக் கோரி 16.05.2025 மற்றும் 23.05.2025-ல் அனுமதியற்ற மற்றும் அனுமதிக்கு மாறான கட்டுமானம் அறிவிப்புகள் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது. விதிகளுக்கு முரணாக மாநகராட்சி அதிகாரிகளால் எவ்வித கட்டிட அனுமதியும் வழங்கப்படவில்லை.

மனுதாரர் மேற்கண்ட புகார் குறித்து 2023ல் மனு அளித்துள்ளார். அம்மனுவின் மீது நடவடிக்கை எடுக்கப் படாமல் இருந்து 2025 முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நான் 08.09.2025-ல் பணிபொறுப்பு ஏற்று தற்போது தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற விவரமும் இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

7. மனுதாரரின் முறையீட்டு மனு, வாக்குமூலம் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் கிழக்கு மண்டல நகர திட்டமிடுநரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் விளாங்குறிச்சி கிராமத்தில் புல எண் 254/3B1 & 254/3B2–ல் 7.54 ஏக்கரில் அமையப் பெற்றுள்ள சிகரம் கார்டன் என்ற மனைப்பிரிவிற்கு கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளரால் வழங்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள EWS மனைகளை ஒருங்கிணைக்கவோ, உட்பிரிவு செய்யவோ கூடாது என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதற்கு மாறாகவும், TNCDBR 2019ன் விதிகளுக்கு புறம்பாகவும், மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள EWS மனைகளை ஒருங்கிணைத்து கட்டுமானங்கள் உருவாக்கியிருப்பது குறித்து கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளருக்கு அளித்த புகார் தொடர்பாக, தற்போது மேற்கண்ட மனைப்பிரிவில் 7 நபர்கள் அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும், அம்மனை பிரிவு உரிமையாளர்களுக்கு கோயம்புத்தூர் மாநகராட்சியால் சட்டப்பூர்வ தாக்கீதுகள் வழங்கப்பட்டுள்ளது என்பதும், எனவே மேற்கண்ட சிகரம் கார்டன் மனைப்பிரிவில் உள்ள அனைத்து கட்டுமானங்களையும் கள ஆய்வு செய்து விதி மீறி கட்டப்பட்டுள்ள கட்டுமானங்கள் மீது நகர் ஊரமைப்பு சட்டம் மற்றும் விதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளருக்கு உத்தரவு வழங்க கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண் 22, கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், விளாங்குறிச்சி கிராமம், புல எண். 254/3B1&254/3B2–ல் 7.54 ஏக்கர் பரப்பளவில் அங்கீகரிக்கப்பட்ட சிகரம் கார்டன் மனைப்பிரிவில், ஒரு சில தனிமனை உரிமையாளர்கள் மேற்கொண்ட கட்டிட விதி மீறல்களுக்காக ஒட்டு மொத்த மனைப்பிரிவு அங்கீகாரத்தையும் ரத்து செய்ய வழி வகையில்லை என்பதும், மனை உரிமையாளர்கள் EWS மனைகளை தனித் தனி சொத்துகளாக கிரையம் பெற்று, அவற்றிக்கு கட்டிட வரைபட அனுமதி பெற்றுள்ளது என்பதும், ஆனால் கட்டிட அனுமதிக்கு மாறாக, மனைப்பிரிவு நிபந்தனைகளை மீறி EWS மனைகளை ஒருங்கிணைத்து கட்டிடம் கட்டியதும், பொது மனை எண் 3 West Part–ல் விதிகளுக்குட்பட்டு கட்டிட வரைபட அனுமதி பெற்றதும், மாநகராட்சியிலிருந்து பெறப்பட்ட கட்டிட அனுமதியை விட கூடுதலான அளவில் கட்டிடம் கட்டப்பட்டது கண்டறியப்பட்டது என்பதும், சம்மந்தப்பட்ட விதி மீறி கட்டிடம் கட்டிய மனை பிரிவு உரிமையாளருக்கு ஆவணங்களை சமர்ப்பிக்கக் கோரி தாக்கீது வழங்கப்பட்டு அதனடிப்படையில் விதி மீறல்களை சரி செய்யக் கோரி 16.05.2025 மற்றும் 23.05.2025–ல் அனுமதியற்ற மற்றும் அனுமதிக்கு மாறான கட்டுமானம் அறிவிப்புகள் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்பதும், விதிகளுக்கு முரணாக மாநகராட்சி அதிகாரிகளால் எவ்வித கட்டிட அனுமதியும் வழங்கப்படவில்லை என்பதும், மனுதாரரின் மனு மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் கிழக்கு மண்டல நகர திட்டமிடுநரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண் 22, கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், விளாங்குறிச்சி கிராமம், புல எண். 254/3B1& 254/3B2–ல் 7.54 ஏக்கர் பரப்பளவில் அங்கீகரிக்கப்பட்ட சிகரம் கார்டன் மனைப்பிரிவில், ஒரு சில தனிமனை உரிமையாளர்கள் மனைப்பிரிவு நிபந்தனைகளுக்கு மாறாகவும், The Tamil Nadu Combined Development and Building Rules, 2019–ன் விதிகளுக்கு மாறாகவும் EWS மனைகளை ஒருங்கிணைத்து கட்டிடம் கட்டியது கண்டறியப்பட்டு, சம்மந்தப்பட்ட விதி மீறி கட்டிடம் கட்டிய மனை பிரிவு உரிமையாளருக்கு சரி செய்யக் கோரி அறிவிப்புகள் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்று கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகர திட்டமிடுநரின் வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ள நிலையில், மேற்கண்ட சிகரம் கார்டன்

மனைப்பிரிவில் அமைந்துள்ள எல்லா EWS மனைப் பிரிவிகளில் அமைந்துள்ள கட்டிடங்களை ஆய்வு செய்து, இதுபோன்ற நேர்வுகளில் அனுமதி மீறி கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து மாண்பமை உச்சநீதிமன்ற மற்றும் மாண்பமை உயர்நீதி மன்ற ஆணைகளை கருத்திற்கொண்டு, தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971–ன்படி உரிய சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், மேலும், இந்நேர்வில் புகார் மனு 2023–ல் அளிக்கப்பட்டிருந்தும் இதுவரை நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்திய சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டல உதவி ஆணையருக்கு உத்திரவிடுமாறு, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. P. மூர்த்தி,
கதவு எண்.1/88, தேவராயன் பாளையம்,
இச்சிப்பட்டி அஞ்சல், பல்லடம் வட்டம்,
திருப்பூர் மாவட்டம்–641 668.

(2) ஆணையர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்–641 001.

(3) உதவி ஆணையாளர்,
கிழக்கு மண்டலம்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.